CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 160G, Poorwarama Road, Kirulapone **Tel:** +094-11 2826388/+094-11 2826384
**Fax**: +094-11 2826146 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

**ஊடக அறிக்கை, 1500 மணி, ஒக்டோபர் 12, 2019, இலங்கை எல்பிட்டிய உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் 2019**

நிலைமையின் இற்றைப்படுத்தல்கள் தொடர்பாக ஹிரந்தைசுரங்கவினால் ஒக்டோபர் 13, 2019 அன்று பதிவிடப்பட்டது.

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில் எல்பிட்டி பிரதேச சபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் ஒக்டோபர் 11, 2019 அன்று 47 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்றது.

ஐந்து (5) அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நூற்று ஐம்பத்தைந்து (155) வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். 53,384 தகுதிவாய்ந்த வேட்பாளர்களினால், இருபத்தெட்டு (28) உள்ளூராட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாக்களிப்பு வீதம் 75% ஆக காணப்பட்டது.

போட்டியிடும் அரசியல் கட்சிகள் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களை, காலி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்த சம்பவத்தோடு இணைந்ததாக 12/2018 நீதிமன்றக் கட்டளைக்கு வழிகோலிய நீதிமன்ற நடவடிக்கைகளினால் தேர்தலை நடத்துவதற்கான தாமதம் காரணமாக, குறிப்பிட்ட இந்தத் தேர்தல் முக்கியமானதாக அமைந்தது.

தேர்தல் நாள், தேர்தல் தொடர்பான வன்முறை மற்றும் முறைகேடுகளின் எந்தப் பாரதூரமான சம்பவங்களுமின்றி முடிவுற்றது. மேலும், தேர்தலின் பின்னதான காலமும் கூட அமைதியானதாக இருந்ததுடன் தேர்தலின் இறுதி முடிவினைச் சவாலுக்கு உட்படுத்துவதாக அது அமைந்திருக்க வில்லை.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கண்காணிப்பாளர்கள் பின்வரும் சிறிய தேர்தல் மீறல் சம்பவங்களை அறிவித்தனர்:

**காலி, ஓமத்தா கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையம் (02:A)**

தேர்தல் நாள் முழுவதிலுமாக வாக்களிப்பு நிலைய வீதியின் இருபக்கங்களிலும் சுவரொட்டிகள் மற்றும் ஏனைய தேர்தல் பிரச்சாரப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பிரதான கட்சிகளைப் (UNP, SLPP மற்றும் SLFP) பிரதிநிதித்துப்படுத்தும் பல வேட்பாளர்களினதும் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

**தலகஸ்பே கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையம் (05:B)**

வாக்களிப்பு நிலையத்திற்கருகாமையில் பெண்ணொருவர் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சிக்கு வாக்களிக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருந்ததை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அறிந்தது. அவர் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் வேட்பாளர் மல்லியவடு நளின் சமிந்த பிரியதர்ஷன என்பவருக்கு தங்கள் வாக்குகளை அளிக்கும்படி வாக்காளர்களை ஊக்குவித்துக் கொண்டிருந்தார்.

**எல்பிட்டி, காலி, ஆனந்த மத்திய மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் (11:C)**

பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெருமாவினால் தலைமை தாங்கப்பட்ட ஒரு வாகனங்களின் தொடரணி ஏனைய சில வேட்பாளர்களுடன் பல வாக்களிப்பு நிலையங்கள் வழியாகச் செல்லும் போது சில வேட்பாளர்களின் பிரச்சாரச் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தியதை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர் (வாகனங்கள் KR 6312, CAW6990,GZ 2665 மற்றும் WP 21483 ஆகிய வாகனப் பதிவிலக்கங்களைக் கொண்டிருந்தன). வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகாமையில் இவ்வாறான வாகனத் தொடரணிகளின் ஒரு பிரசன்னம் ஒரு வாக்களிப்புப் பகுதியில் ஓர் அமைதியான சூழ்நிலையைப் பேணுவதற்கு ஒரு சவாலாக அமைந்திருந்தது.

**காலி, பினிக்கஹன்ன சிறிநிவாச கனிஷ்ட வித்தியாலய வாக்களப்பு நிலையம் (16:A)**

ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன (SLPP) வேட்பாளர் ஜயநெத்தி ஆராச்சி ஜனக குமார (மேலதிக பெயர்ப்பட்டியலின் கீழ் பட்டடியலிடப்பட்ட வேட்பாளர்), வாக்களிப்பு நிலையத்திற்கு அருகாமையில் நின்று கொண்டு தனது கட்சிக்கு வாக்களிக்கும் படி வாக்காளர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு டிபென்டர் ரக வாகனம் (பதிவிலக்கம் PG 0007) இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தது.